விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 13 செவ்வாய்க்கிழமை (29.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 244

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பருத்தித்துறையில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(துன்னாலை)

பருத்தித்துறை அத்தியடி பிள்ளையார் கோயிலடியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மாவிலடியிலிருந்து இடம் பெயர்ந்து சுப்பர்மடம் பகுதியில் வசித்து வந்த சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் உப.தலைவர் செல்லத்துரை கோபாலசிங்கம் (வயது 53) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த வேளை சைக்கிளில் வந்த ஒருவர் வெளியே அழைத்ததாகவும் அவ்வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. இவரது சடலம் மரணவிசாரணைக்காக மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-101,104)

## வயோதிப மாது வெட்டிக்கொலை

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் வயோதிப மாது ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். சேர்ச் வீதி சங்கானையைச் சேர்ந்த செல்லத்துரை மாக்ரா (வயது 70) என்ற வயோதிப மாதே வெட்டிக்கொலை செய்யப்பட்டவராவார்.

இவரது வீட்டில் இருந்தவர்கள் திருமணவீடு ஒன்றிற்காகச் சென்ற சமயம் இவர் வீட்டில் தனியாக இருந்ததாகவும் அப்போதே இவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிபதி விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

## ஒட்டுசுட்டானில் கிளைமோர் ஒருவர் பலி;மற்றொருவர் காயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் பலியாகியுள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் சந்தியிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் நேற்று முன்தினம் இத் தாக்குதல் நடந்துள்ளது. கட்டடம் அமைப்பதற்காக பொருட்களை ஏற்றிச் சென்ற கன்ரர் ரக வாகனம் இத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

சம்பவ இடத்திலேயே பொதுமகன் உயிரிழந்தார். மூன்று பிள்ளைகளின் தந்தையான பழைய முறிகண்டியைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை சந்திரகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் (04 ஆம் பக்கம் பார்க்க)

# சம்பூரில் நேற்று உக்கிர மோதல்

# எறிகணை வீச்சில் 20 பேர் பலி

## 11 இராணுவம், 3 புலிகள் உயிரிழப்பு

(திருகோணமலை)

சம்பூரில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் நடைபெற்ற உக்கிரமோதலில் 11 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.விடுதலைப்புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

## அரசாங்கத்தில் இணைவது குறித்து விரைந்து முடிவெடுக்க தேவையில்லை

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இதனையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணை மற்றும் விமானத்தாக்குதலில் 20 பொதுமக்கள் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

அரசாங்கத்தில் இணைவது குறித்து விரைந்து முடிவெடுக்கவேண்டியதில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழுக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு நடை பெற்றது.

இக் கூட்டத்தில் அரசாங்கத்தில் இணைவதற்கு முன்பாக முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கப்படவேண்டு மென்று (04 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் இலக்குகள் மீது இராணுவம் தாக்குதல்

(கொழும்பு)

மூதூர் சம்பூர் பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுவருவதாக இராணுவப்பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். இதன் போது விடுதலைப்புலிகளின் முக்கிய நிலைகள் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். இதேவேளை இத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் ஆயுதக்களஞ்சியம் ஒன்று தீப்பிடித்து எரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை விடுதலைப்புலிகளின் தாக்குதல் களை எதிர்த்து பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சு)

# ஜனாதிபதியின் கேள்வி தொடர்பில் ஐ.தே.கட்சி இன்று முடிவு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்து இன்று எழுத்து மூலமான பதில் அறிவிக்கப்படவுள்ளதாக ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பாக தனது உறுப்பினர்களுடன் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாக ஐ.தே.கட்சியின் பிரதிப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு, நாடு பிளவுபடாமல் அரசியல் தீர்வுக்கு ஐ.தே.க.முழுமையான ஒத்துழைப்பு (04 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பொற்பதி வீதியிலுள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகம் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினமிரவு அவ் அலுவலகத்தினுள் நுழைந்தவர்கள் அலுவலகத்தை தீவைத்ததாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து கடந்த டிசெம்பர் மாதம் விடுதலைப்புலிகள் தமது பணியை இடைநிறுத்தி விட்டு கிளிநொச்சி சென்றமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

# யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூவர் ஜெலிக்னைட் குச்சிகளுடன் கைது

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட 616 ஜெலிக்னைட் குச்சிகளுடன் மூவர் புத்தளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். நாகபெல சந்தியிலுள்ள சோதனைச்சாவடியில் நேற்று இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவை வாகனத்தின் ஆசனங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# வவுனியாவில் சூடு சிப்பாய் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் நேற்று பகல் 12.10 மணியளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒரு படைச்சிப்பாய் கொல்லப்பட்டும் மற்றுமொருவர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சிப்பாய் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டி ருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர் (ச-7)







அல்லைப்பிட்டி பங்குத் தந்தை ஜிம்புறவுண் அடிகளார் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தை கண்டித்தும் அவர் மீள திரும்ப வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று நாவாந்துறை புனித நிக்கிலாஸ் ஆலயத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பேரணி மற்றும் உண்ணாவிரத நிகழ்வுகளின் கலந்து கொண்டவர்களைப் படங்களில் காணலாம்.

# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக உறவினர்களிடையே தகவல் பரிமாற்றம்

(நல்லூர்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடுகளிலுள்ள உறவினர்களுக்கு தகவல் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

தமது உறவினர்களுக்குத் தகவலை அனுப்ப விரும்புவோர் 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையிலிருந்து பெறப்படும் பத்திரத்தை பெற்றுத் தாம் தெரிவிக்க விரும்பும் தகவலை யாழ்.கிளையின் தேடுதல் சேவை உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கவும்.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் செய்தி ஓரிரு நாட்களுக்குள் சர்வதேச செஞ்சிலுவைக் குழு மூலமாக குறிப்பிட்டவரைச் சென்றடையும். அவர்கள் மூலம் பெறப்படும் பதிலும் மீண்டும் குறிப்பிட்டவருக்கு வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவொரு இலவச சேவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வெளிமாவட்டத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் மூலமாக யாழ்.செஞ்சிலுவைச் சங்கக் குழுவிற்கு அனுப்பப்படும் செய்திகளும் யாழ்.கிளையின் தொண்டர்கள் மூலம் உரியவரின் விலாசத்தை வந்தடையும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (ச-134)

# பொலிஸாரை விடுதலை செய்ததில் எதுவித உள்நோக்கமும் இல்லை

## தயா மாஸ்டர் தெரிவிப்பு

பொலிஸ் அதிகாரி பொப்பிட்டிக் கொடவை விடுதலை செய்ததில் எதுவித உள்நோக்கமும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக் குழுத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிச் சொல்லும் உல்ப் ஹென்றிக்சன் கேட்டுக் கொண்டதற்கமைய பொப்பிட்டிக் கொட விடுதலை செய்யப்பட்டதாகவும் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய மோதல் நிறுத்தப்பட்டால் தான் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கான நம்பிக்கை உருவாகும் என்றும் நோர்வே அனுசரணையுடனான பேச்சுக்களைத் தான் விடுதலைப்புலிகளின் ஏற்றுள்ளனரே தவிர அரசாங்கத்துடனான நேரடிப் பேச்சுக்களை அல்ல என்றும் தயா மாஸ்டர் கூறினார்.

நோர்வே அனுசரணையாளர்கள் நீதியின் பக்கமே நிற்கின்றனர் என்றும் அப்படி அரசாங்கம் கருதாமல் இருக்குமானால் யுத்த நிறுத்தத்திலிருந்து விலகிக் கொள்ளலாம் என்றும் கூறிய தயா மாஸ்டர் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும்போது அரசாங்கத்துடன் நேரடிப் பேச்சுக்களுக்கு அவசியம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். (ச)

# நேர்முகப் பரீட்சையை பிற்போட வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து இலங்கை நிர்வாக சேவை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 14 பரீட்சார்த்திகளுக்குரிய நேர்முகப் பரீட்சையினை செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னர் நடத்துமாறு பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலரிடம் பக்ஸ் மூலம் கோரப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

# வல்வையில் எம்.ஜி.ஆரின் சிலை தார்பூசி சேதமாக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனுக்கு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருந்த உருவச் சிலைகள் தார் பூசி சேதப்படுத்தப்பட்டுள்ளன.

எம்.ஜி.ஆருக்கு மதிப்பளிக்கும் வகையில் யாழ்ப்பாண வல்வெட்டித்துறை மக்களால் அவருக்கு உருவச் சிலை நிர்மாணிக்கப்பட்டது.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போது நேற்று முன்தினம் இரவு வல்வெட்டித்துறையில் உள்ள சிலை மீது வீதித் திருத்தத்திற்கு வைக்கப்பட்டிருந்த தாரை பூசி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் குருநகரில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். சிலையும் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஏறாவூரில் பெண் சுட்டுக்கொலை

ஏறாவூர் வந்தாறுமூலையில் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தாயான சோமலிங்கம் லட்சுமி(வயது-48) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டுக்குச் சென்ற ஆயுதக் குழுவினர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த பெண் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் பொலிஸார் இச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-7)

# இலங்கையின் ஒற்றையாட்சிமுறை மாற்றி அமைக்கப்பட வேண்டும்!

## பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட

இலங்கையில் தற்போதைய ஒற்றையாட்சி முறைமாற்றி அமைக்க வேண்டும் என்று சிங்களப் பேராசிரியரான ஜெயதேவ உயங்கொட வலியுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண காலனியாதிக்க காலத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஒற்றையாட்சி முறையை மறுசீரமைக்க வேண்டும்.

ஆனால் சிங்களஅரசியல் சக்திகள் அரச கட்டமைப்பை மாற்றத் தயாராகவில்லை. 25 ஆண்டு காலம் இனப்பிரச்சினை நீடிக்கின்ற போதிலும் சிங்கள அரசியல் சக்திகள் இம்முடிபுக்கு வரவில்லை.

தற்போதைய இலங்கை அரசியல் யாப்பானது ஒற்றையாட்சியைத்தான் வரையறுக்கிறது. ஆனால் விடுதலைப்புலிகளோ அதற்கு அப்பாலான பார்வையைக் கொண்டுள்ளனர். இது தொடர்பிலான நிலைப்பாட்டில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் பாரிய இடைவெளியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு மாகாண அதிகாரங்களை பகிர்ந்தளிக்கலாம் என்ற முற்போக்கான அரசியல்வாதிகள் கூறுவதைக் கூட ஏற்கமாட்டார்கள். சம அதிகாரம் பகிரப்படுவதை சிங்களவர்கள் ஏற்கமாட்டார்கள். எந்தவொரு அமைதி முயற்சிகளிலும் குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

தற்போதைய அரசாங்கமாகவிருக்கட்டும் முன்னைய அரசாங்கமாக இருக்கட்டும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களை நடத்தும் போது தெளிவான அரசியல் திட்டம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

தற்போதைய அரசாங்கமானது 2002 ஆம் ஆண்டு அமைதி முயற்சிகள் சீர்குலைந்த நிலையில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. இந்த அரசாங்கத்திடம் அமைதி முயற்சியை முன்னெடுக்கும் சவால் உள்ளது. ஆனால் தற்போதைய அரசாங்கமானது அத்தகைய புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் கருதவில்லை என்றார். (ச)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர்களுக்கு

(துன்னாலை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தற்காலிகமாக சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டியில் இயங்கி வருகிறது. எனவே அங்கு பணியாற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள ஊழியர்கள் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரத்தில் தவறாது சமுகம் தருமாறு பிரதேச சபைச் செயலர் சி.சிவப்பிரகாசம் கேட்டுள்ளார். (ச-10)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

சண்முகம் லோகேஸ்வரன்

திதி-ஷஷ்டி

ஆண்டுகள் இரண்டல்ல ; ஈராயிரமானாலும்

நெஞ்சம் மறக்குமா நின் நினைவை?

நித்தமும் உன்னை நினைந்து உள்ளம் உருகுகிறோம்!

எப்போது காண்போம் இனி?

பிறப்பு 24.03.1939

இறப்பு 20.09.2004

டச்சு றோட்,
சித்தங்கேணி.

உங்கள் பிரிவால் துயருறும்,
மைத்துனன்-வே.பொன்னம்பலம்.

(488)


# தீவுப்பகுதி போக்குவரத்துக்கு நேற்று முற்றாகத் தடைவிதிப்பு

தீவுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மக்கள் அல்லைப்பிட்டிக் கடற்படை முகாமில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளிலிருந்து ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளை சுமார் 5 மினிவான்களில் யாழ். நோக்கி மக்கள் புறப்பட்டனர்.

அவர்கள் அல்லைப்பிட்டிக் கடற்படை முகாமில் வைத்துத் தடுக்கப்பட்டு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டனர்.யாழில் பாரிய தேடல்கள் நடைபெறுவதாகக் கூறியே மக்களை கடற்படையினர் திருப்பி அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் தீவுப் பகுதியிலிருந்து ஒரு சில மினிவான்கள் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# ப.நோ.கூ.சங்கங்களுக்கு அரச அதிபரின் அறிவிப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தமக்குரிய வழங்கற் கட்டளைகளையும் உணவுப் பொருட்களையும் இன்று காலை 8.30 மணி முதல் கோண்டாவில் உணவுக் களஞ்சியத்தில் மாவட்ட செயலக உதவித் திட்டப் பணிப்பாளரிடம் பெற்று உடனடியாக மக்களுக்கான விநியோகத்தை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

இறுதியில் இலட்சியத்தை அடைவிக்கும் காரியங்களை செய்தால் மட்டும் போதாது. செய்யும் ஒவ்வொரு காரியமுமே இலட்சியமாக இருக்க வேண்டும்.

—கெதே

வலம்புரி

# ஏ-9 பாதையைத் திறக்க காத்திரமான நடவடிக்கை தேவை

ஆகஸ்ட் 11 ஆம் திகதி யாழ்.குடாநாட்டில் ஆரம்பித்த யுத்தத்தினால் யாழ்ப்பாணத்தையும் பிற மாவட்டங்களையும் இணைக்கும் ஏ-9 பாதை மூடப்பட்டது.

2002 ஆம் ஆண்டு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை அடுத்து ஏ-9 பாதை திறந்து விடப்பட்டது.

இதனால் யாழ்.மாவட்டத்திற்கும் வெளிமாவட்டங்களிற்கும் இடையிலான போக்குவரத்து இலகு படுத்தப்பட்டன.

அதேநேரம் தென்னிலங்கையைச் சேர்ந்த பல தரப்பினரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து வடபுலத்து நிலைமைகளைக் கண்டறிந்து சென்றனர்.

சமாதான விரும்பிகள் என்ற பேரில் தென்னிலங்கையிலிருந்து வந்தவர்கள் யாழ்ப்பாணத்து நிலைமைகளை ஏனையவர்களுக்கும் எடுத்துக் கூறி சமாதானம் பிறப்பதற்கு வழிவகுப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் முடிபுகள் எதிர்மறையாகவேயிருந்தன.

இந்நிலையில் யுத்தத்தை யார் ஆரம்பித்ததாக இருந்தாலும் பதினான்கு நாட்களுக்கு முன்னதாக யுத்தம் ஆரம்பிப்பது குறித்து முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பது யுத்தநிறுத்த உடன்படிக்கை நிபந்தனையாக இருந்த போதிலும் எதுவித முன்னறிவித்தலும் இன்றி யுத்தம் மூண்டு கொள்ள ஏ-9 பாதையும் மூடப்பட்டது.

துரதிஷ்டவசமாக ஏ-9 பாதையின் முன்னரங்கப் பகுதியில் யுத்தம் மூண்டதனால் ஏ-9 பாதைக்கான மூடுவிழா எதுவித ஆரவாரமும் இன்றி அரங்கேறியது.

பாதை திடீரென மூடப்பட்டதனால் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியவர்கள் யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்திற்கு வர வேண்டியவர்கள் வெளிமாவட்டங்களிலும் தங்க வேண்டியதாயிற்று.

கூடவே ஆவணி மாதம் தமிழர்களின் திருமண நன்னாளுக்குரிய மாதமாக இருப்பதனால் திருமணங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தவர்கள் அவற்றை நிறைவேற்ற முடியாமல் இரண்டும் கெட்டான் நிலையில் தவிக்கின்றனர்.

இவையெல்லாம் மானிடத்தின் உரிமை என்பது அனைவராலும் உணரப்பட வேண்டியது என்ற கருத்தை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.


அட! வந்த கப்பலிலேயே தட்டி, வெட்டி, கொட்டியே உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. யுத்தத்தால் பாதிப்படைந்துள்ள யாழ்ப்பாண மக்களின் அடிப்படைத் தேவையான உணவுப் பண்டத்திலேயே இந்தளவு கஞ்சத்தனம்-கபடத்தனம் என்றால் அவர்களின் ஏனைய 'மானிட உரிமை' பற்றி எந்தளவு தூரம் கவனம் எடுக்கப்படும் என்ற உங்களின் முணுமுணுப்பு கேட்கவே செய்கிறது.

எதுவாயினும் ஏ-9 பாதையைத் திறந்து விடுவதன் ஊடாக தடைப்பட்டுப்போயுள்ள போக்கு வரத்தை மீள ஆரம்பிப்பதுடன் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு அனைத்தும் தீர்வதற்கும் அது வழிவகுக்கும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் பயணத்திற்காகக் காத்திருக்க தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் ஏ-9 பாதையால் பயணம் மேற்கொண்ட கணக்கை மீண்டும் பார்க்க கப்பல் பயணம் அதற்கெல்லாம் ஈடுகொடுக்க மாட்டாது என்பதை உணர முடியும்.

எனவே சமாதான அனுசரணைப் பணியில் தன்னை ஈடுபடுத்தியுள்ள நோர்வே ஏ-9பாதையை திறப்பதற்குக் காத்திரமான முயற்சியை முன்வைக்க வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# இந்தியாவிடமிருந்தும் ஆயுதங்களை இலங்கை அரசு பெற்றுக் கொண்டது



பாகிஸ்தானிடமிருந்து மட்டுமல்ல இந்தியாவிடமிருந்தும் ஆயுதங்களை வாங்கியிருக்கிறோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்தியா ருடே வார இதழுக்கு மகிந்த ராஜபக்ஷ அளித்த நேர்காணலிலேயே அவர் தெரிவித்துள்ளார்.


இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். விடுதலைப்புலிகளிடம் போரிட வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். நிர்ப்பந்தங்களுக்கு நாங்கள் பணிந்து விடமாட்டோம்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க வேண்டும். இந்த விடயத்தில் இந்தியாவின் உதவி எங்களுக்குத் தேவை. இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எங்களுடைய முதல் தேர்வு இந்தியாதான். அதன் பிறகுதான் நாங்கள் மற்ற நாடுகளின் உதவியை நாடுவோம்.

தங்கள் நாட்டில் உள்ள அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப இந்தியா அனுசரித்துச் செயற்படுகிறது என்பதை நான் அறிவேன்.

நாங்கள் பாகிஸ்தானிலிருந்து மட்டும் ஆயுதங்கள் வாங்கவில்லை. இஸ்ரேல், சீனா, உக்ரைன்,ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்தும் ஆயுதம் வாங்குகிறோம்.

சில சமயங்களில் இந்தியாவிலிருந்து கூட வாங்கியிருக்கிறோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-5)



# பாதுகாப்பு ஒப்பந்தங்கள் எதனையும் இலங்கையுடன் செய்து கொள்ளக்கூடாது

## பழ.நெடுமாறன் வலிறுத்தல்

(சென்னை)

இலங்கை அரசுக்கு எவ்வித உதவியையும் இந்திய அரசு செய்யக் கூடாது என்பதை வலியுறுத்த தமிழக முதல்வர் தலைமையில் புதுடில்லிக்கு தூதுக்குழு செல்ல வேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து தமிழக சட்ட மன்றத்தில் அனைத்துக் கட்சி ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை வரவேற்கிறேன. வெறும் தீர்மானத்துடன் நின்று விடாமல் இந்தியப் பிரதமரைச் சந்தித்து வலியுறுத்திட அனைத்துக் கட்சியினர் கொண்ட தூதுக்குழுவை அமைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

முதலமைச்சர் தலைமையில் தூதுக்குழுவை அழைத்துச் சென்று பிரதமரைச் சந்திக்க வேண்டும். இலங்கையுடன் இந்தியா எந்தவித பாதுகாப்பு உடன்பாடும் செய்து கொள்ளக் கூடாது. ஆயுத உதவியோ அல்லது பயிற்சியோ அளிக்கக் கூடாது.

இலங்கைக்கு ஆயுதம் ஏற்றிச் செல்லும் விமானம், கப்பல் இந்திய விமான நிலையத்திற்கோ, துறைமுகத்திற்கோ வந்து செல்ல அனுமதிக்கக் கூடாது.

நோர்வேத் தூதுக்குழுவினர் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை நிறைவேற்ற இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடைக்கால அரசு அமைத்து நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். இந்தியா ஆயுதம் கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்ற மேற்கண்ட கோரிக்கைகளை முதலமைச்சர் தலைமையிலான தூதுக்குழு பிரதமரைச் சந்தித்து வலியுறுத்த வேண்டும் என பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார். (ச)

# புலிகளின் பாதுகாப்பு இல்லம் பமுனுகமவில் செயற்படுகிறது

## கொழும்பு ஊடகம் தகவல்

பமுனுகமவில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட வீடானது புலிகளின் பாதுகாப்பு இல்லமாக செயற்பட்டதாக கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு ஊடகத்தின் செய்தி விபரம் வருமாறு;

பமுனுகமவில் ஆயுதங்கள் பறிமுதல் தொடர்பாக பன்றிப் பண்ணை உரிமையாளர் இரு பெண்கள் உட்பட 18 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி,7 கைக்குண்டுகள், 15 கிலோக்கிராம் எடையுள்ள 2 கிளைமோர்க்குண்டுகள், 115 தோட்டாக்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டதாக பமுனுகமப் பொலிஸ் அதிகாரி ஜே.பி.டி.ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

மற்றொரு அதிகாரியான டி.டபிள்யு.ஜீவகசத கூறுகையில்; கைது செய்யப்பட்டோரில் நான்கு பேருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்புள்ளது என்றும் இந்த வீடானது விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு இல்லமாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களால் துறைமுகம் தொடங்கி விமானம் நிலையம் வரை இலக்கு வைக்கப்படலாம் என்றும் முக்கிய அரச நிறுவனங்கள் இலக்காகி இருக்கலாம் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் தாங்கள் வந்திருந்ததை பதிவு செய்துள்ளதாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். ஆயுதங்கள் கைப்பற்றிய வீட்டிற்கு கடந்த மே மாதம் விடுதலைப்புலிகள் வந்து தங்கியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர் என்று கொழும்பு ஊடகச் செய்தி தெரிவிக்கிறது. (ச-5)

# பாடசாலை ஆரம்பிப்பது குறித்து இன்று முக்கிய கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து இன்று கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. யாழ்.அரச அதிபர் க.கணேஷ், கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கிடையில் இச் சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சந்திப்பின் போது யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்குவது குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை நேற்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நேரத்தில் சில பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றனர். எனினும் பாடசாலைகள் பூட்டப்பட்டிருந்ததால் அவர்கள் திருப்பிச் சென்றனர். (ச)

# பேராயர் நியமனத்திற்குத் தடை

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.மாவட்டப் பேராயராக நியமிக்கப்பட்ட அருட்தந்தை தியாகராஜாவின் நியமனம் செல்லுபடியாகாது என கல்கிசை நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

இந்நியமனம் யாழ்ப்பாண தென்னிந்தியத் திருச்சபையுடன் கலந்தாலோசிக்காமல் தென்னிந்தியாவில் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து அதனை தடை செய்யும்படி மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனை ஆராய்ந்த கல்கிசை நீதிவான் இத் தடை உத்தரவை நேற்றுப் பிறப்பித்தார். (ச)

# குடும்பஸ்தர் மூவர் பலி

(மட்டக்களப்பு)

உப்புவெளி கிண்ணியாவில் கண்ணி வெடியில் சிக்கி மூன்று தமிழர்கள் உயிரிழந்துள்ளனர். உழவு இயந்திரம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிருந்த போது கிண்ணியாவில் அவர்களது உழவு இயந்திரம் கண்ணி வெடியில் சிக்கியது. இதில் மூவர் உயிரிழந்தனர்.

கந்தையா கணேஷ்(வயது-51), குலசேகரம் ஜெயரட்ணம் (வயது-52), அப்புக்குட்டி சுகுமார்(வயது-59) ஆகிய மூவரே உயிரிழந்துள்ளனர். இது குறித்து உப்புவெளிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ச)



யாழ்.அல்லைப்பிட்டிப் பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட அருட்தந்தை ஜிம்பிறவுண் அடிகளாரையும் அவரது உதவியாளரையும் விடுவிக்கக் கோரி நேற்று கிளிநொச்சியில் யாழ். மறை மாவட்ட கத்தோலிக்கக் குருக்கள் இணைந்து உண்ணாவிரதமும் அமைதி வழிப் பேரணியும் நடத்தியுள்ளனர். அதனைபடத்தில் காணலாம்.

# சர்வகட்சி பிரதிநிதிகளின் மாநாடு

(கொழும்பு)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு நேற்று மாலை கூடி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இதில் ஐ.தே.கட்சி தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களும் புத்திஜீவிகளும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். அரச சமாதான செயலகத்தில் நேற்று மாலை 6 மணி வரை நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. (ச)

# இராணுவத்தினரும் பொலிஸாருமே உண்மையான கதாநாயகர்கள்

இராணுவத்தினரே உண்மையான கதாநாயகர்கள் என்று தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற சுசந்திகா புகழாரம் சூட்டியுள்ளார்.

100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் கடந்த சனிக்கிழமை சுசந்திகா வெற்றி பெற்ற உடனேயே இதனை தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தியாகத்தால்தான் 10 நாள் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சாத்தியமானதாக இருந்தது என்றும் அவர்கள் உண்மையான கதாநாயகர்கள் -அவர்கள் ஈடுபாட்டுடன் செயற்படவில்லையெனில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றிருக்காது என்றும் கூறினார். (ச-5)

# உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது !

அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தை ஜிம் புறவுண் மற்றும் அவரது உதவியாளர் தொடர்பாக உரிய தரப்பினர் பதிலளிக்க வேண்டுமெனக்கோரி மேற்கொள்ளப்பட்ட அடையாள உண்ணாவிரதப்போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

நீதிக்கும் சமாதானத்திற்குமான நல்லெண்ணக்குழுவின் ஏற்பாட்டில் யாழ்.மரியன்னை ஆலயத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதம் நேற்றும் தொடர்ந்தது.பங்குத்தந்தைகள், கன்னியாஸ்திரிகள், பொதுமக்கள் என பலர் இவ் அடையாள உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். (ச)

# ஜனாதிபதியின்...

தருமெனக்குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையில் சமாதானத்தை உருவாக்குவதற்கு தேசிய அரசு ஒன்று அமைப்பதற்கு அரசாங்கத்துடன் இணையுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசாங்கத்தில் இணைவது...

தீர்மானிக்கப் பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஹசன் அலி இது தொடர்பில் தெரிவித்ததாவது, மூதூரில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினை, அமைதி முயற்சிகளின் குறைபாடுகள், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய குழு இம் முடிபை எடுத்துள்ளது.

இருப்பினும் அமைதி முயற்சிகளில் அரசாங்கத்தை ஆதரிப்போம். அனைத் துக் கட்சி ஆலோசனைக்கூட்டத்திலும் பிரதிநிதிகள் குழுக்கூட்டத்திலும் பங்கேற்போம்.

அனைத்துக்கட்சிக்கூட்டத்தின் ஊடாக அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சுக்களை நாம் நடத்துவோம். மூதூரில் அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் இன்னும் எட்டாத தொலைவில்தான் உள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஊடாகத்தான் நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார் ஹசன் அலி. (ச)

# ஒட்டுசுட்டானில்...

முத்தையன்கட்டு வலதுகரையைச் சேர்ந்த மார்க்கண்டு சிவரூபன் என தெரியவந்துள்ளது. இவர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# சம்பூரில் நேற்று உக்கிரமோதல்...

விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் உள்ள சம்பூரைக்கைப்பற்றும் நோக்கில் முப்படைகளுடன் மும்முனைகளில் பாரியளவிலான வலிந்த இராணுவ நடவடிக்கைகளை இராணுவத்தினர் நேற்றுத் தொடங்கியுள்ளனர்.

இதில் 20 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

புலிகளின் பதில் நடவடிக்கையில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 79 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆட்லறி, பீரங்கிக்குண்டுகள் ,பல்குழல் றொக்கட் குண்டுகள்,மோட்டார் எறிகணைகளை செறிவாக வீசிக்கொண்டு கிபீர் -மிக் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தியவாறு நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நகர்வு முயற்சியினை இராணுவத்தினர் மேற்கொள்ளத் தொடங்கினர்.

டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களுடன் இராணுவத்தினர் பச்சனூர் -தோப்பூர் ஆகிய இருமுனைகளில் இந் நகர்வைத் தொடங்கினர்.

தொடர்ந்து தோப்பூர் மற்றும் கிளத்தி முனையூடாக விடுதலைப்புலிகளின் முன்னரண் பகுதிகளுக்கு நகர முயன்றபோது இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தீவிர பதில் தாக்குதலை நடத்தத்தொடங்கினர் என திருமலை அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தினரின் வலிந்த தாக்குதல் நடவடிக்கைக்கு ஆதரவாக இலக்கந்தையில் இருந்து கடற்படையினரும் பீரங்கிக்குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

நேற்றைய தாக்குதல் நடவடிக்கையடுத்து மூதூர் கிழக்கின் பள்ளிக்குடியிருப்பு ,கணேசபுரம் ,பாட்டாளிபுரம் ,சேனையூர் உள்ளிட்ட இடங்களில் ஏற்கனவே இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்கள் மீண்டும் இடம்பெயர்ந்தனர்.

ஆனால் அந்த மக்கள் நல்லூரைச் சென்றடைந்தபோது நல்லூர்ப் பகுதியில் செறிவான ஆட்லறி, றொக்கட் குண்டுகள் மற்றும் கிபீர் விமானக்குண்டுத் தாக்குதல்கள் இராணுவத்தினரால் வீசப்பட்டன.

இதையடுத்து அங்கிருந்து மக்கள் மீளவும் பாட்டாளிபுரத்திற்குத் திரும்பினர் பாட்டாளிபுரத்திற்கு அந்த மக்கள் சென்றபோது அக்கிராமம் மீது தொடர்ச்சியாக ஆட்லறி,றொக்கட் குண்டுகள் மற்றும் கிபீர் விமானக் குண்டுத் தாக்குதல்கள் பாரியளவில் நடத்தப்பட்டன.இதில் 20 பொதுமக்கள் அந்த இடத்திலேயே படுகொலை செய்யப்பட்டனர். 26 பேர் படுகாயமடைந்தனர் என எழிலன் கூறினார்.

இதனிடையே மகிந்தபுரம் பகுதியில் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட நகர்வு முயற்சியானது நேற்று காலையில் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் வலிந்த தாக்குதல் நடவடிக்கைக்கு எதிராக பதில் நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூன்று போராளிகள் வீரச்சாவைத்தழுவியுள்ளனர். ஐந்து போராளிகள் காயமடைந்துள்ளனர். விடுதலைப்புலிகளின் பதில் தாக்குதல் நடவடிக்கையில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் 79 பேர் படுகாயமடைந்துள்ளனர். (ச)


எமது கல்வி நிறுவன சமூகத்தினர் அனைவரும் எதிர்வரும் 02 -ம் திகதி (சனிக்கிழமை) *ஊரடங்கு தளர்த்தப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின்னர்* நிறுவனத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தினமும் இந்நேர இடைவெளியில் அலுவலகம் திறந்துதிருக்கும்.

The Express Institute
Irupalai, Kopay.

-அதிபர்

(E-429)



## திருமண நாள் ஒத்திவைப்பு

ஆவணி 14 ஆம் நாள் (30.08.2006) அன்று இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்தில்.

**செல்வன் பரந்தாமன்** அவர்களுக்கும்,

**செல்வி பபிதா** அவர்களுக்கும்,

நடை பெறவிருந்த திருமண வைபவம் தற்போது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப் பெற்றுள்ளது. நடைபெறும் காலம் பத்திரிகை மூலம் பின்னர் அறியத்தருகின்றோம்

பெற்றோர்,

வைத்திய கலாநிதி
பொன் இராமநாதன்,
கலாநிதி
திருமதி கலைவாணி இராமநாதன்,
தாவடிச் சந்தி, கொக்குவில்.

திரு.திருமதி ஐ.கணேசமூர்த்தி,
இணுவில் தெற்கு, இணுவில்.

(432)



## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

தற்போது கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட மா எமது சங்கத்திற்கு தரப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கோதுமை மாவினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய பயன்படுத்துமாறு சகல வெதுப்பக உரிமையாளரையும் கேட்டுக்கொள்கிறோம்.

1. பாண் உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
2. பாணின் நிறை 450 கிராமாக இருப்பதுடன் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை ரூபா 28/= ஆக இருக்க வேண்டும்.
3. வர்த்தகர்களுக்கான விற்பனைக் கழிவு ரூபா 01/= ஆக இருக்க வேண்டும்.
4. எக்காரணம் கொண்டும் வேறு உற்பத்திகளுக்கு இம் மா பயன்படுத்தக் கூடாது.
5. விலை, நிறை,தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் பொதுமக்கள் 222 3814 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

நிர்வாகம்,
யாழ்.மா.பே.உ.சங்கம்.

(433)



## 9 ஆவது பிறந்த நாள் வாழ்த்து




கொக்குவில் கிழக்கில் வசிக்கும் சற்குணலிங்கம் செல்வநிதி தம்பதியரின் அருந்தவப் புதல்வி

**சுகன்ஜா**

தனது ஒன்பதாவது பிறந்த தினத்தை இன்று (29.08.2006) செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவர் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

-குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 29.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.